# எல்லா வயதினருக்கும் உகந்த வீடுகளைக் கட்டித் தருதல்

## விருப்பங்களை ஈடேற்றுதல், சமூகங்களை வலுப்படுத்துதல்

வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் மேலும் அதிகமான தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் வீடுகளை நல்ல இடங்களில்கட்டவுள்ளது. இடைநிலை (Plus)வீடுகள் கூடுதல் நிதியுதவியுடன் விற்கப்படும் போதிலும், அவற்றுக்கு மேலும் இறுக்கமான நிபந்தனைகள் உள்ளன. Plus மறுவிற்பனை வீடுகளை வாங்குவோருக்கு $14,000 வருமான உச்ச வரம்பு அவற்றுள் ஒன்று. 10 சிங்கப்பூர்க் குடும்பங்களில், 8 குடும்பங்களுக்கு அது பொருந்தும். அத்தியாவசியத் தேவைக்காக வீடு வாங்க விரும்புவோருக்கு ஆதரவளிக்கவும், வருங்காலத்தில் வீடு வாங்குவோருக்கு கட்டுப்படியான வீடுகளை அளிக்கவும் இவை முற்படுகின்றன.

**2024ஆம் ஆண்டின் இரண்டாம் பாதி முதல், புதிய தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் வீட்டுத் திட்டங்கள் அவற்றின் அமைவிட அம்சங்களைப் பொறுத்து வகைப்படுத்தப்படும்.**

| வகைப்பாடு | அமைவிடம் | நிதியுதவிகள் | நிபந்தனைகள் |
|---|---|---|---|
|  அடிப்படை (Standard) | தீவு முழுவதும் வீடுகளில் பெரும்பாலானவை | அடிப்படை நிதியுதவிகள் | அனைத்துத் தேவைக்கேற்ப கட்டித்தரப்படும் வீடுகளுக்கான அடிப்படை நிபந்தனைகள் பின்வருமாறு:<br>• 5-ஆண்டு குறைந்தபட்சக் குடியிருப்புக் காலகட்டம்<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படும் *(வீடமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் அனுமதிக்கு உட்பட்டு)*<br>• மறுவிற்பனை வீடு வாங்குவோருக்கு வருமான உச்சவரம்பு கிடையாது |
| புதிது  இடைநிலை (Plus) | ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள விரும்பத்தக்க அமைவிடங்கள் *அதாவது, போக்குவரத்து நடுவங்கள், நகர மையங்கள் ஆகியவற்றுக்கு அருகில்* | அடிப்படை நிதியுதவிகள் தவிர, மேலும் அதிகமான நிதியுதவிகள் | <u>மேலும் இறுக்கமான நிபந்தனைகள்:</u>[1]<br>• $14,000 வருமான உச்சவரம்பு<br>– மற்ற குடும்பங்கள் தற்போது மீதமுள்ள 1.1 மில்லியன் மறுவிற்பனை வீடுகளை வாங்க முற்படலாம்<br>• மறுவிற்பனைக்குப் பிறகு நிதியுதவி மீட்டுக்கொள்ளப்படும் *(முதன்மை வீடுகளைவிடக் குறைவு)*<br>• 10-ஆண்டு குறைந்தபட்சக் குடியிருப்புக் காலகட்டம்<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படாது |
|  முதன்மை (Prime) | ஆக விரும்பத்தக்க, சிங்கப்பூரின் மையப் பகுதியில் உள்ள வட்டாரங்கள் *தென் நீர்முகப்பு உள்ளிட்ட நகர்ப் பகுதியைச் சுற்றிய வட்டாரம், நகர மையம்* | அடிப்படை நிதியுதவிகள் தவிர, மேலும் கூடுதலான, ஆக அதிகமான நிதியுதவிகள் | <u>ஆக இறுக்கமான நிபந்தனைகள்:</u>[1]<br>• வருமான உச்சவரம்பு:குடும்பங்களுக்கு $14,000, ஒற்றையருக்கு $7,000<br>• விற்பனைக்குப் பிறகு நிதியுதவி மீட்டுக்கொள்ளப்படும்<br>• 10-ஆண்டு குறைந்தபட்சக் குடியிருப்புக் காலகட்டம்<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படாது |

*1 மறுவிற்பனை தகுதிநிபந்தனைகளில், வீடு வாங்குவோரில் குறைந்தது ஒரு சிங்கப்பூரர் இடம்பெற்றிருக்கவேண்டும், தனியார் சொத்து உரிமையாளர்கள் தங்கள் தனியார் சொத்தை விற்ற பிறகு, 30 மாதம் காத்திருக்கவேண்டும் ஆகியவை அடங்கும்.*

**தற்போதுள்ள 1.1 மில்லியன் வீடுகளுக்கான நிபந்தனைகளில் மாற்றங்கள் ஏதுமில்லை.**

**மேல்விவரங்களுக்கு, www.mnd.gov.sg/bto-classification**

MND SINGAPORE HOUSING & DEVELOPMENT BOARD

